அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

அ.எண் :102/2017

தேதி : 22/09/2017

**சீனப் பட்டாசை முற்றிலும் தவிர்ப்போம்,**
**ஆபத்தில்லா தீபாவளி கொண்டாடுவோம்.**

**அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின்**
**நிறுவனத்தலைவர் ஆர்.சரத்குமார் அவர்கள் வேண்டுகோள்.**

கோடிக்கணக்கான குடும்பங்களின் குதூகல கொண்டாட்டமான தீபாவளிப் பண்டிகை, பல ஆயிரம் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை நிர்ணயம் செய்கிறது.

ஆடைகள், ஆபரணங்கள், இனிப்புகள் என இவற்றைத் தொடர்ந்து பட்டாசுகளும், மத்தாப்புகளும் இல்லாமல் தீபாவளிப் பண்டிகை நிறைவடையாது. பட்டாசு, மத்தாப்புகள் நமக்கு ஏற்படுத்தும் மகிழ்ச்சியின் ஒளிக்குப் பின்னால், அவற்றைத் தயாரிக்கும் பணியில் ஆண்டுமுழுவதும் ஈடுபட்டிருக்கும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் சந்திக்கும் ஆபத்து, அவர்களின் வருவாயை நம்பி இருக்கும் அவர்களது குடும்பங்களின் பரிதாப நிலை என்ற இருள் சூழ்ந்து இருப்பது தெரியவரும்.

ஆண்டு முழுவதும் பட்டாசுகளின் விற்பனை இருந்துவந்தாலும், தீபாவளி நேரத்து விற்பனை மட்டுமே பட்டாசுத் தொழிற்சாலைகளின் லாபத்தையும், தொழிலாளர்களின் வருவாயையும் உறுதி செய்யும். தமிழகத்தில், சிவகாசி பட்டாசு தயாரிப்பில் நாட்டிலேயே முதலிடம் வகித்து வருகிறது. ஆனால் சமீப காலங்களில் பட்டாசுத் தொழிலை நலிவடையச் செய்யும் விதமாகவும், இத்தொழிலை நம்பியிருக்கும் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை முடக்கும் விதமாகவும் சீனப் பட்டாசுகள் சந்தைக்கு வருவது கவலை அளிப்பதாக உள்ளது.

சீனப் பட்டாசுகள் உள்நாட்டுப் பொருளாதாரத்தை சீர்குலைக்க வைக்கும் அதேவேளை, நம்நாட்டு தரக்கட்டுப்பாட்டு விதிகளை மீறி தயாரிக்கப்பட்டு இருப்பதால் ஆபத்தை விளைவிப்பதாகவும் அமைந்துவிடுகின்றன. மத்திய, மாநில அரசுகள் இவற்றைக் கண்காணித்தாலும், ஏதோ ஒரு வகையில் முறைகேடாக சந்தைக்கு வந்து பாதிப்பை ஏற்படுத்தி வருவதும் கண்கூடு. குறுகிய காலத்தில், குறைந்த முதலீட்டில் கொள்ளை லாபம் அடைந்துவிடவேண்டும் என்ற நோக்கில் செயல்படும் சில சமூக விரோதிகளின் குறுகிய எண்ணமே இதற்கு காரணம்.

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

**MAKE IN INDIA** கோஷத்தை அன்றாடம் முழங்கிவரும் பிரதமர், சீனப் பட்டாசு ஒரு ரூபாய் அளவுகூட நாட்டிற்குள் நுழைந்துவிடக் கூடாது என்பதை உறுதி செய்யவேண்டும். தமிழக அரசும், காவல் துறைக்கும், அரசு அதிகாரிகளுக்கும் உத்தரவுகள் பிறப்பித்து, சீனப் பட்டாசுகள் விற்பனையை முற்றிலும் தடை செய்யவேண்டும். அனுமதிக்கப்பட்ட பட்டாசுக் கடைகள் மட்டுமன்றி, வேறு எங்கும் சீனப்பட்டாசு விற்பனை நடைபெறவில்லை என்பதை உறுதி செய்ய வேண்டும். முறைதவறி சீனப் பட்டாசு விற்பவர்களையும், சீனப் பட்டாசுகளை இறக்குமதி செய்பவர்களையும் குண்டர் சட்டத்தின் கீழ் கைது செய்து கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவையல்லாது, பொது மக்களாகிய நமக்கும் கடமையும், பொறுப்புணர்வும் உள்ளது. விலை மலிவு என்னும் ஒரே காரணத்திற்காக சீனப் பட்டாசுகளை வாங்கி, பட்டாசுத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் பல்லாயிரக் கணக்கான நம் சகோதர சகோதரிகளின் வாழ்வதாரத்தைச் சீர் குலைத்துவிடக் கூடாது. அதே நேரத்தில் ஆபத்தையும் விலைக்கு வாங்கிவிடக்கூடாது என்று அன்பான வேண்டுகோளை வைக்கிறேன்.

சமத்துவ மக்கள் கட்சி நிர்வாகிகளும், தொண்டர்களும் சீனப் பட்டாசுகள் விற்பனையை எங்காவது காண நேர்ந்தால், உடனடியாக காவல் துறைக்கு தகவல் தெரிவித்து நடவடிக்கை எடுக்கச் செய்ய வேண்டுகிறேன்.

சீனப் பட்டாசை முற்றிலும் தவிர்ப்போம், ஆபத்தில்லா தீபாவளி கொண்டாடுவோம், பட்டாசுத் தொழிலை நம்பியிருக்கும் தொழிலாளர் வாழ்வில் ஒளியேற்றுவோம்.

நன்றி வணக்கம்,
உழைப்பவரே உயர்ந்தவர்

என்றும் அன்புடன்

**ஆர்.சரத்குமார்**
நிறுவனத்தலைவர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com